<u>உதவி அமர்வு நீதிபதி மற்றும் தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

<u>முன்னிலை :-</u> திருமதி.J.கிறிஸ்டல் பபிதா எம்.எஸ்.சி., எம்.எல்.,
உதவி அமர்வு நீதிபதி மற்றும்
தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 11 ஆம் நாள் வியாழக்கிழமை

**<u>S.C.No. 373/ 2023</u>**

<u>C.N.R.No.TNTS 02-000054-2023</u>

(செங்கோட்டை, குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின்
முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண். 18 /2023)
(குற்றாலம் காவல் நிலைய குற்ற எண். 434/ 2022)

| | | |
|---|---|---|
| அரசுக்காக :<br>காவல் ஆய்வாளர்,<br>குற்றாலம் காவல் நிலையம். | : | ... குற்ற முறையிடுபவர் |
| | : | <u>எதிரி</u>:-<br>சிவா, வயது 21/22<br>த.பெ. லட்சுமணன்,<br>51 சுடலைமாடன் கோவில் தெரு,<br>தற்போது - வடக்குத்தியம்மன்கோவில் தெரு,<br>இலஞ்சி. |
| அரசுதரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் | | எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 307, 506(ii) - ன்படி குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. |
| நீதிமன்றம் எதிரி மீது வனைந்த குற்றச்சாட்டுகள் | | எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 307, 506(ii) - ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது. |
| எதிரியின் கூற்று | | குற்றவாளி இல்லை. |
| நீதிபதியின் நிர்ணயம் | | எதிரி இதச பிரிவுகள் 294(பி), 506(2)-ன் கீழ் குற்றவாளி இல்லை என்றும் எதிரி இதச பிரிவு 307 - ன் கீழ் குற்றவாளி என்றும் |

| | | |
|---|---|---|
| | | தீர்மானிக்கப்படுகிறது. |
| தீர்ப்பு :– | : | முடிவாக, எதிரி மீதான இதச பிரிவுகள் 294(பி), 506(ii) –ன் படியான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே மேற்கூறிய பிரிவின் கீழ் எதிரி குற்றவாளி அல்ல என்றும் முடிவு செய்து, எதிரியை இதச பிரிவு 294(பி), 506(2) – ன் படியான குற்றங்களிலிருந்து குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 235(i)ன் கீழ் விடுதலை செய்தும், எதிரி மீதான இதச பிரிவு 307– ன் படியான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே எதிரி மேற்கூறிய பிரிவின் கீழ் குற்றவாளி என்றும் தீர்மானித்து வழக்கின் தன்மை, எதிரியின் வயது, குடும்ப சூழ்நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு, எதிரி மீதான இதச பிரிவு 307 ன் படியான குற்றத்திற்கு தண்டனையாக **ஒரு வருடம் கடுங்காவல் சிறைதண்டனையும், அபராதம் ரூ.5000/–** விதித்தும், அபராதம் கட்டத் தவறினால் மேலும் **ஒரு மாதம் மெய்காவல் சிறைதண்டனை** விதித்தும் குவிமுச பிரிவு 235(ii) ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. மொத்த அபராத தொகை ரூ.5000/– இவ்வழக்கில் எதிரி விசாரணை காலத்தில் நீதிமன்ற காவலில் |

| | | |
|---|---|---|
| | | இருந்த 29.12.2022 முதல் 12.01.2023 மற்றும் 26.05.2025 முதல் 26.08.2025 வரையிலான நாட்களை எதிரியின் சிறைத்தண்டனை காலத்தில் இருந்து கழித்துக் கொள்ள குவிமுச பிரிவு 428 ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.<br>இவ்வழக்கில் பிஆர் எண் 119/2025 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு, சாபொ–1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள கத்தி ஒன்று. சாபொ–2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள இரத்தக்கறை படிந்த நீலக்கலர், சிகப்பு கலர் முதுகுப்பகுதியில் கிழிந்த நிலையில் உள்ள அரைக்கை சட்டை ஒன்று. சாபொ–3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள இரத்தக்கறை படிந்த நீலம், வெள்ளைக்கலர் கட்டம்போட்ட சாரம் ஒன்று ஆகியவை பயனற்ற பொருள்கள் என்பதினால் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் அழிக்குமாறும், மேல் முறையீடு இருப்பின் மேல் முறையீட்டு உத்தரவுப்படி செயல்பட வேண்டு மென்றும் உத்தரவிடப்படுகிறது. |

இந்த வழக்கானது செங்கோட்டை, கற்றறிந்த நீதித்துறை நடுவர் அவர்களால் 19.05.2023 அன்று முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.18/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அதன்பிறகு இவ்வழக்கு மேல் விசாரணைக்காக திருநெல்வேலி முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கு இந்த வழக்கானது **அமர்வு வழக்கு எண்.373/2023** ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அங்கிருந்து இவ்வழக்கானது தென்காசி முதன்மை உதவி அமர்வு

நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு அங்கு 14.06.2023 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் தென்காசி மாவட்ட அமர்வு நீதிமன்ற A.No.104/2024 03.06.2024 தேதியிட்ட உத்தரவுப்படி இந்நீதிமன்றத்திற்கு வரப்பெற்று 18.07.2024 அன்று இந்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கு **08.05.2026** அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, குற்றமுறையிடுபவர் தரப்பில் கூடுதல் அரசு குற்றத்துறை வழக்குரைஞர் திரு. R. சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. சண்முகராமர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், இவ்வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரான ஆய்வில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று (11.06.2026) இந்நீதிமன்றம் வழங்கும்....

## தீர்ப்புரை

1. அரசுத்தரப்பில், கடந்த 28.12.2022 ம் தேதி 20.45 மணிக்கு புகார்தாரர் இலஞ்சி சவுக்கு முக்கில் உள்ள ரஹ்மத் புரோட்டா கடையில் புரோட்டா சாப்பிட்டுக் கொண்டிருந்த போது அங்கு வந்த எதிரி முன் விரோதத்தால் புகார்தாரரின் முதுகு புறமாக வந்து மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து புகார்தாரரின் முதுகில் ஓங்கி குத்தியதாகவும், உடனே புகார்தாரர் எழுந்து எதிரியை தடுத்து நிறுத்தி அவரிடமிருந்து தப்ப முற்பட்டபோது எதிரி கையில் வைத்திருந்த கத்தியை காட்டி புகார்தாரரை பார்த்து "எங்க அம்மாவையே மன்னிப்பு கேட்க வச்சிட்ட நீ உயிரோடு இருக்க கூடாதுல இத்தோட சாவுல தேவிடியாபயலே புண்டமவனே" என்று அசிங்கமாக பேசியதாகவும், புகார்தாரரின் வலது பக்க மார்பில் ஓங்கி குத்தியும் மீண்டும் அதே கத்தியால் வலது கை பெருவிரலோடு சேர்த்து உள்ளங்கையிலும் குத்தியும் சாதாரண காயங்கள் உண்டுபண்ணியதாகவும், புகார்தாரரை பார்த்து "என்னைக்கானாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன்" என கொலை மிரட்டல் விடுத்ததாகவும், எனவே

எதிரி இதச பிரிவுகள் 294(பி), 324, 307, 506(ii) –ன் படி குற்றம் புரிந்துள்ளதாகவும் குற்றாலம் காவல் நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரிக்கு குற்றவியல் நீதிமன்றத்திலேயே வழக்கின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ் வழங்கப்பட்டு, எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 307–ன் படியான குற்றம் அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க குற்றமாக உள்ளதால் இந்த வழக்கு கு.வி.மு.ச. பிரிவு 209(அ) பிரிவின்படி அமர்வு நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

3. இரு தரப்பு வாதுரைகளையும் ஆவணங்களையும் பரிசீலனை செய்து எதிரி குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குற்றம் புரிந்திருக்கக்கூடும் என்று கருதுவதற்கு போதுமான ஆதாரங்கள் வழக்கில் இருந்தமையால் எதிரி மீது பிரிவுகள் 294(பி), 307, 506(ii)–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு குற்றச்சாட்டுகள் பற்றி எதிரியிடம் விளக்கிக்கூறி வினவியபோது எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்தார். எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்த காரணத்தால் அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.11 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்களும் சாபொ–1 முதல் 3 ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>5) அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தின் சுருக்கம்:–</u>

கடந்த 28.12.2022 ம் தேதி இலஞ்சி சவுக்கு முக்கு ரோட்டில் உள்ள புரோட்டா கடையில் இரவு 8.45 மணியளவில் அசா–1 மாரியப்பன் என்பவர் சாப்பிட்டு கொண்டிருந்துள்ளார். எதிரி கையில் வைத்திருந்த கத்தியால் அசா–1 ன் முதுகிலும், மார்பிலும் குத்தியுள்ளார். மீண்டும் குத்திய போது அசா–1 தடுத்ததில் வலது கை பெருவிரலில் வெட்டுக்காயம் ஏற்பட்டுள்ளது. எதிரி அசா–

1 ஐ பார்த்து "தேவிடியா மவனே புண்டமவனே" என்று கெட்ட வார்த்தைகளால் பேசியுள்ளார். "என் அம்மாவை மன்னிப்பு கேட்க வைத்தாய் அல்லவா உன்னை கொல்லாமல் விட மாட்டேன்" என்று மிரட்டியுள்ளார். காயம்பட்ட அசா–1 சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்றுள்ளார். அசா–1 சிகிச்சையில் இருக்கும் போது போலீசாரிடம் அசா–1 புகார் வாக்குமூலம் அசாஆ–1 கொடுத்துள்ளார்.

6. அசா.9 காவல் உதவி ஆய்வாளர் வெள்ளத்துரை என்பவர் 28.12.2022 ம் தேதி 21.45 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது தென்காசி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் படி மருத்துவமனைக்கு சென்று அசா.1 மாரியப்பன் என்பவரிடம் இருந்து அசா.ஆ.1 புகார் வாக்குமூலம் பெற்று வந்து அதனடிப்படையில் முதல் தகவல் அறிக்கை அசா.ஆ.3 பதிவு செய்துள்ளார்.

7. அசா–10 மருத்துவர் ராமர் என்பவர் தென்காசி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்த போது கடந்த 28.12.2022 அன்று இரவு 09.00 மணிக்கு அசா–1 மாரியப்பன் என்பவரை பரிசோதித்துள்ளார். அவருக்கு மார்பிலும், முதுகிலும் 2 x 0.5 x 3 செமீ அளவிலும் கூர்மையான குத்து காயமும், வலது கை பெருவிரலின் முன்பகுதி தோல் பகுதியில் 3 x 1 செமீ அளவில் வெட்டுக்காயமும் இருந்துள்ளது. அசா–10 அவரை உள்நோயாளியாக சிகிச்சை அளித்து 02.01.2023 அன்று அவர் விடுவிக்கப்பட்டுள்ளார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் எனச் காயச்சான்று அசாஆ–4 வழங்கியுள்ளார்.

8. மேற்படி வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட அசா.11 காவல் ஆய்வாளர் பாலமுருகன் என்பவர் 29.12.2022 ம் தேதி அதிகாலை 01.00 மணியளவில் இவ்வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் அசா–5 மசூதுஅலி மற்றும் அசா–6 இனயத்துல்லா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அசாஆ–2 பார்வை மகஜர் மற்றும் அசா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்பு

மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த அசா–1 மாரியப்பன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவத்தின் போது சாட்சி பயன்படுத்திய அசாபொ–2 இரத்தக்கறை படிந்த நீலம் மற்றும் சிவப்பு கலர் கலந்த முதுகு பகுதி கிழிந்த நிலையில் இருந்த அரைக்கை சட்டை ஒன்று, அசாபொ–3 இரத்தக்கறை படிந்த நீலம், வெள்ளை கலர் கட்டம் போட்ட சாரம் ஒன்று ஆகியவற்றை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றியுள்ளார். பின்னர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் 29.12.2022 ம் தேதி பகல் 02.00 மணிக்கு வழக்கின் எதிரியை இலஞ்சி டிடிடிஏ ஆசிரியர் பயிற்சி பக்கம் வைத்து கைது செய்துள்ளார். சாட்சிகள் கிட்டு மற்றும் எஸ்விபிவி பாண்டியன் ஆகியோர்கள் முன்னிலையில் விசாரிக்க எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர் இடுப்பு சாரத்திலிருந்து எடுத்து ஆஜர் படுத்திய அசாபொ–1 கத்தியை அத்தாட்சி அசாஆ–7 மூலம் கைப்பற்றியுள்ளார். கைப்பற்றப்பட்ட பொருட்களை படிவம் 91 அசாஆ–8 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். உதவி ஆய்வாளர் வெள்ளத்துரை என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் குற்றாலம் ஆய்வாளர் ராஜேஷ்கண்ணன் என்பவரிடம் வழக்கு விசாரணை கோப்புகளை அவரிடம் ஒப்படைத்துள்ளார். பின்னர் ஆய்வாளர் ராஜேஷ்கண்ணா என்பவர் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ராமர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று அசாஆ–4 பெற்றுள்ளார். கைப்பற்றப்பட்ட சான்று பொருட்களை திருநெல்வேலி இரசாயன பகுப்பாய்விற்கு அனுப்பி அறிக்கை அசாஆ–9 பெற்றுள்ளார். பின்னிட்டு இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

9. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு

பாதகமான அம்சங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச 313(1)(ஆ) பிரிவின்படி வினவியபோது எதிரி 'பொய் சாட்சி' என்று மறுத்துள்ளார். எதிரி தரப்பில், சாட்சிகள் 'இல்லை' என்று கூறியுள்ளார்.

<u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்ன வென்றால்,</u>

10. அரசுத்தரப்பில், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 294(பி), 307, 506(ii) – ன் படியான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதாகும்.

**<u>11) தீர்வு–</u>**

அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில், எதிரி அசா–1 மாரியப்பன் என்பவரை அவதூறான வார்த்தைகள் பேசி கத்தியால் குத்தி கொலை செய்ய முயற்சித்து கொலை மிரட்டல் செய்ததாக உள்ள அரசுத்தரப்பு வழக்கை ஒத்து அசா–1 மாரியப்பன் என்பவர் சாட்சியம் அளித்துள்ளார் எனவும் அசா–1 க்கு ஏற்பட்ட காயத்தை பொறுத்து அசா–1 ன் சாட்சியத்தை ஒத்து மருத்துவர் அசா–10 ராமர் என்பவர் சாட்சியம் அளித்துள்ளார் எதிரி அசா–1 ஐ குத்துவதற்கு பயன்படுத்திய கத்தி புலன் விசாரணை அதிகாரியால் கைப்பற்றப்பட்டுள்ளது எனவும் இந்த வழக்கு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

12. எதிரிதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பில்லை எனவும், அசா–1 ற்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என மருத்துவர் சான்று வழங்கி உள்ளார் எனவும் அசா–1 ன் புகார் வாக்குமூலத்திலும் சாட்சியத்திலும் எதிரி தாக்கியதை தான் தடுக்காவிட்டால் தனக்கு மரணம் விளைவிக்கக்கூடிய கொடுங்காயம் ஏற்பட்டிருக்கும் என கூறவில்லை எனவும் இந்நிலையில் 307 இதச பிரிவு வராது எனவும் புகார் வாக்குமூலம் பதிவு செய்ததாக கூறப்பட்ட அசா–9 உதவி ஆய்வாளர் வெள்ளத்துரை என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் தன்னுடன் வந்த

ரைட்டர் புகார் வாக்குமூலத்தை கைப்பட எழுதினார் என சாட்சியம் அளித்துள்ளார் எனவும் அவருடன் சென்றதாக கூறப்பட்ட காவலர்கள் எவரையும் புலன் விசாரணை அதிகாரி விசாரிக்கவில்லை எனவும் இந்நிலையில் புகார் வாக்குமூலம் அரசுத்தரப்பில் கூறியவாறு பதிவு செய்யப்படவில்லை எனவும் சம்பவ இடத்தில் இரண்டு ரகுமத் ஹோட்டல்கள் உள்ளதாக வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது எனவும் அதில் எந்த ரகுமத் கடை என அசா–1 சாட்சியம் அளிக்கவில்லை எனவும் அசாஆ–5 வரைபடத்தில் வாஞ்சிநாதன் மணி மண்டபம் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் அசா–1 தன்னுடைய குறுக்கு விசாரணையில் சம்பவ இடத்தில் வாஞ்சிநாதன் மணி மண்டபம் இல்லை என கூறியுள்ளார் எனவும் சம்பவம் நடந்து சுமார் 4 மணி நேரத்திற்குள் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்ததாக கூறப்பட்டுள்ள நிலையில் சம்பவ இடத்தில் டேபிள், சேர் கலைந்து இருந்ததாகவோ ரத்த கரை இருந்ததாகவோ அசாஆ–5 வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை எனவும் இந்நிலையில் சம்பவ இடத்திற்கு புலன் விசாரணை அதிகாரி சென்று பார்வை இடவில்லை எனவும் கண்ணுற்ற சாட்சியான அசா–2 முதல் அசா–4 வரையான சாட்சியங்கள் அரசுத்தரப்பு வழக்கை ஒத்து சாட்சியம் அளிக்கவில்லை எனவும் ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அசா–7, அசா–8 ஆகியோர்கள் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாகவோ ஆயுதம் கைப்பற்றப்பட்டதாகவோ அரசுத்தரப்பு வழக்கை ஒத்து சாட்சியம் அளிக்கவில்லை எனவும் அசா–1 தன்னுடைய சாட்சியத்தில் கத்தியின் அடையாளத்தை பற்றி புகார் வாக்குமூலத்திலும் மற்றும் விசாரணையிலும் கூறவில்லை என சாட்சியம் அளித்துள்ளார் எனவும் படிவம் 91 ல் ரத்தக் கரை படிந்த கத்தி என குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் புலன் விசாரணை அதிகாரி தன்னுடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் ரத்தக்கரை இல்லாத கத்தி எதிரி ஆஜர்படுத்தினார் என கூறியுள்ளார் எனவும் மருத்துவரிடம் ஆயுதத்தை காண்பித்து கருத்து பெறப்படவில்லை எனவும் முன்விரோதம் குறித்து எதிரியின் தாயாரோ அசா–1

ன் குடும்பத்தை சேர்ந்த நபர்களையோ புலன் விசாரணை அதிகாரி விசாரிக்கவில்லை எனவும் புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சி கையெழுத்து செய்ததாக கூறப்பட்ட பாலகிருஷ்ணன் என்பவர் அரசுத்தரப்பில் விசாரிக்கப்படவில்லை எனவும் அசா–1 டமிருந்து புகார் வாக்குமூலம் பதிவு செய்த போது அசா–1 ன் உடன் பிறந்த சகோதரி மருத்துவமனையில் இருந்ததாக அசா–1 சாட்சியம் அளித்துள்ளார் எனவும் உண்மையிலேயே புகார் வாக்குமூலம் மருத்துவமனையில் வைத்து அசா–1 டம் இருந்து பெறப்பட்டுஇருந்தால் அசா– 1 ன் சகோதரி அறிவேன் சாட்சியாக புகார் வாக்குமூலத்தில் கையெழுத்து செய்து இருப்பார் எனவும் அசா–1 முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளார் எனவும் புலன் விசாரணை அதிகாரியால் கைப்பற்றப்பட்ட கத்தியில் இருந்த ரத்தக்கரை அசா–1 ன் ரத்தம் என குறித்து தடைய அறிவியல் துறைக்கு அனுப்பப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு தெளிவாக்கப்படவில்லை எனவும் அசா–1 சம்பவத்தின் போது அணிந்திருந்த சட்டையில் முதுகு பகுதி மட்டும் தான் கிழிந்த நிலையில் இருந்துள்ளது எனவும் முன்பகுதியில் ஓட்டை இருந்ததாக குறிப்பிடப்படவில்லை எனவும் எதிரி அசா–1 ன் மார்பு பகுதியில் கத்தியால் குத்தி இருந்தால் சட்டையின் முன்பகுதியில் கிழிந்து இருக்கும் எனவும் இந்நிலையில் சம்பவத்தை குறித்து முரண்பாடுகள் உள்ளதாக அறியமுடிகிறது எனவும் புலன் விசாரணை அதிகாரி உள்ளூரை சேர்ந்த நபர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை எனவும் அரசுத்தரப்பில் இந்த வழக்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி அவரை விடுதலை செய்ய வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

எதிரிதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்திற்கு ஆதரவாக கீழ் கண்ட முன் தீர்ப்புரைகளை மேற்கோள் காட்டியுள்ளார்.

**“AIR 2020 Supreme Court 4894,**
**Criminal Appeal No. 335 of 2015**
Amar Singh Vs. The State (NCT of Delhi).

**Before the Madurai Bench of Madras High Court**
**Dt. 11.12.2017,**
**Crl A(MD) No.560 of 2006**
Subramanian Vs. State by the Inspector of Police,
Pattukkottai Police Station,

**Before the Madurai Bench of Madras High Court**
**Dt. 28.04.2023**
**Crl OP (MD) No.11980 of 2021 and**
**Crlm MP No.2480 of 2021**
Velusamy Vs. 1. State rep. by The Inspector of Police,
Gandamanur Vilakku Police Station,

13. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசுத்தரப்பில், எதிரி அசா–1 மாரியப்பன் என்பவரை அவதூறான வார்த்தைகள் பேசி கத்தியால் குத்தி காட்டி கொலை செய்ய முயற்சித்து கொலை மிரட்டல் செய்ததாக கூறப்பட்டு எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 307, 506(ii) –ன் படியான குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது.

14. அசா–1 மாரியப்பன் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் 28.12.2022 ம் தேதி இலஞ்சி சவுக்கு முக்கு ரோட்டில் உள்ள புரோட்டா கடையில் இரவு 8.45 மணியளவில் தான் சாப்பிட்டு கொண்டிருந்த போது எதிரி கடைக்கு வந்து முறைத்து பார்த்து கொண்டிருந்தார் எனவும் எதிரி கையில் வைத்திருந்த கத்தியால் தனது முதுகில் குத்தினார் எனவும் மீண்டும் மார்பில் குத்தினார் எனவும் மீண்டும் குத்தும் போது தான் தடுத்ததில் வலது கை பெருவிரலில் வெட்டுக்காயம் ஏற்பட்டது எனவும் எதிரி தன்னை "தேவிடியா மவனே, புண்டா மவனே" என்று கெட்ட வார்த்தைகளால் பேசியதாகவும் தன்னிடம் "என் அம்மாவை மன்னிப்பு கேட்க வைத்தாய் அல்லவா உன்னை கொல்லாமல விட மாட்டேன்" என்று மிரட்டினார் எனவும் அருகில் இருந்தவர்கள் சத்தம் போட்ட போது "என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன்" என்று மிரட்டி விட்டு சென்றார் எனவும் பின்னர் தன்னை தென்காசி அரசு

மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்ததாகவும் போலீசார் அங்கு வந்து விசாரித்தபோது தான் அசாஆ–1 புகார் வாக்குமூலம் கொடுத்ததாகவும் கூறியுள்ளார்.

15. அசா–1 ற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அசா–10 ராமர் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் 28.12.2022 அன்று இரவு 9 மணிக்கு மாரியப்பன் என்பவர் தன்னிடம் சிகிச்சைக்காக வந்ததாகவும் அவருடைய மார்பு பகுதியிலும், முதுகு பகுதியிலும் 2 x 0.5 x 3 செமீ அளவில் கூர்மையான குத்துகாயமும், வலது கை பெருவிரலின் முன்பகுதி தோல் பகுதியில் 3 x 1 செமீ அளவில் வெட்டுக்காயமும் இருந்ததாகவும் அவருக்கு சிகிச்சை அளித்து 02.01.2023 அன்று மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டதாகவும் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என தான் காயச்சான்று அசாஆ–4 வழங்கியதாகவும் கூறியுள்ளார். காயத்தை பொறுத்து அசா–1 மற்றும் மருத்துவர் அசா–10 ஆகியோரின் சாட்சியங்களில் எந்த முரண்பாடுகளும் இல்லை என அறியமுடிகிறது.

16. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் அசா–9 வெள்ளத்துரை என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் 28.12.2022 ம் தேதி 21.45 மணிக்கு தென்காசி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின்படி மருத்துவமனைக்கு சென்று மாரியப்பன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து நிலையம் வந்து அசாஆ–3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக கூறியுள்ளார். அசா–9 தன்னுடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் புகார் வாக்குமூலம் தான் கைப்பட எழுதவில்லை எனவும் தன்னுடன் வந்த ரைட்டர் கணேசன் தான் எழுதினார் எனவும் கூறியுள்ளார்.

17. எதிரிதரப்பில் புலன் விசாரணை அதிகாரி புகார் வாக்குமூலத்தை கைப்பட எழுதிய நபரை விசாரிக்கவில்லை எனவும் அசா–1 தன்னுடைய சாட்சியத்தில் குறுக்கு விசாரணையில் சம்பவ நாள் ஏட்டையா வந்து

வாக்குமூலம் வாங்கினார் என்றால் சரி தான் என கூறியுள்ளார் எனவும் புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சி கையெழுத்தை செய்து உள்ள பாலகிருஷ்ணன் என்பவர் விசாரிக்கப்படவில்லை எனவும் அசா–1 ன் சகோதரி மருத்தவமனையில் இருந்துள்ள நிலையில் அவரிடம் இருந்து கையெழுத்து எதுவும் புகார் வாக்குமூலத்தில் பெறப்படவில்லை எனவும் அசா–1 தன்னுடைய சாட்சியத்தில் மருத்துவமனை செல்லும் போது தான் மயக்க நிலையில் இருந்ததாகவும் மறுநாள் காலை 10.00 மணிக்கு மயக்கம் தெளிந்ததாக சாட்சியம் அளித்துள்ளார் எனவும் இந்நிலையில் சம்பவ நாள் அசா–1 டம் இருந்து புகார் வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக அரசுத்தரப்பில் கூறுவது நம்பபடியாக இல்லை எனவும் கூறப்பட்டுள்ளது.

18. அசா–1 தன்னுடைய சாட்சியத்தில் தன்னுடைய நண்பர் பாலகிருஷ்ணன் என்பவர் அறிவேன் சாட்சியாக புகார் வாக்குமூலத்தில் கையெழுத்து போட்டதாக கூறியுள்ளார். புகார் வாக்குமூலம் அசாஆ–1 லும் அறிவேன் சாட்சி கையெழுத்து உள்ளது. புலன் விசாரணை அதிகாரியால் பாலகிருஷ்ணன் என்ற நபர் விசாரிக்கப்படவில்லை. அசா–1 தன்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் தான் அசாஆ–1 புகார் வாக்குமூலம் தான் கொடுத்ததாகவும் தன்னுடைய வலது கை பெருவிரலில் வெட்டு காயம் இருந்ததால் கை ரேகை வைத்து கொடுத்ததாகவும் கூறியுள்ளார். மேலும் அசா–1 தன்னுடைய குறுக்கு விசாரணையில் "நான் மருத்துவமனை செல்லும் போது மயக்க நிலையில் இருந்தேன் என்றால் சரிதான். எனக்கு மயக்கம் மறுநாள் காலை 10.00 மணிக்கு தெளிந்தது என்றால் சரிதான். அதற்கு பின்னர் தான் போலீசார் வந்து விசாரித்தார்கள் என்றால் முதல் நாளே நான் சிகிச்சையில் இருக்கும் போது போலீசார் வந்து வாக்குமூலம் வாங்கினார்கள். சம்பவ நாள் ஏட்டையா வந்து வாக்குமூலம் வாங்கினார் என்றால் சரிதான். ஏட்டையாவுக்கும் எஸ்.ஐக்கும் உள்ள வேறுபாடு எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால்

சரியல்ல. போலீசார் எனக்கு படித்து காண்பித்தார்கள்" என கூறியுள்ளார்.

19. முதல் தகவல் அறிக்கை அசாஆ–3 ஐ பார்க்கும் போது 28.12.2022 அன்று 23.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை அசா–9 வெள்ளத்துரை என்பவரால் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சி கையெழுத்து செய்த பாலகிருஷ்ணன் மற்றும் புகார் வாக்குமூலத்தை கைப்பட எழுதிய கணேசன் ஆகியோர்கள் அரசுத்தரப்பில் விசாரிக்கப்படவில்லை என்ற காரணத்தால் அசா–1 டம் இருந்து புகார் வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என கருதமுடியாது. அசா–1 சம்பவம் நடந்த சிறுது நேரத்திலேயே மருத்தவமனைக்கு சிகிச்சைக்கு வந்ததாக விபத்து பதிவேடு அசாஆ–4 மற்றும் மருத்துவர் அசா–10 ஆகியோரின் சாட்சியத்தில் இருந்து தெரியவருகிறது. மேலும் சம்பவ நாள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. சம்பவத்திற்கு மறுநாள் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு வரபட்டுள்ளது. இந்நிலையில் அசாஆ–1 புகார் வாக்குமூலம் மற்றும் அசாஆ–3 முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றை பொறுத்து அரசுத்தரப்பு வழக்கில் எந்த சந்தேகமும் எழவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

20. அசாஆ–1 புகார் வாக்குமூலத்தில் இலஞ்சி சவுக்கு முக்கில் உள்ள ரஹ்மத் புரோட்டா கடையில் புரோட்டா சாப்பிட்டு கொண்டிருந்த போது சம்பவம் நடந்ததாக கூறப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை அசாஆ–3 லும் அவ்வாறு தான் கூறப்பட்டுள்ளது. அசா–1 தன்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் இலஞ்சி முக்கு ரோட்டில் உள்ள புரோட்டா கடையில் வைத்து சம்பவம் நடந்ததாக கூறியுள்ளார். புலன் விசாரணை அதிகாரி அசா–11 ஆய்வாளர் பாலமுருகன் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் சம்பவத்திற்கு மறுநாள் 29.12.2022 அதிகாலை 1.00 மணிக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் அசாஆ–2 மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ–5 தயார் செய்ததாக கூறியுள்ளார்.

21. எதிரிதரப்பில் சம்பவ இடத்தில் 2 ரஹ்மத் ஹோட்டல்கள் உள்ளதாக வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது எனவும் அதில் எந்த ரஹ்மத் கடையில் வைத்து சம்பவம் நடந்தது என குறிப்பிட்டு அசா–1 சாட்சியம் அளிக்கவில்லை எனவும் அசாஆ–5 வரைபடத்தில் வாஞ்சிநாதன் மணி மண்டபம் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் அசா–1 தன்னுடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் சம்பவ இடத்தில் வாஞ்சிநாதன் மணி மண்டபம் இல்லை என கூறியுள்ளார் எனவும் சம்பவம் நடந்து சுமார் 4 மணி நேரத்திற்குள் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்ததாக கூறப்பட்டுள்ள நிலையில் சம்பவ இடத்தில் டேபிள், சேர் கலைந்து இருந்ததாகவோ ரத்த கரை இருந்ததாகவோ அசாஆ–5 வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை எனவும் இந்நிலையில் சம்பவ இடத்திற்கு புலன் விசாரணை அதிகாரி சென்று பார்வையிடவில்லை எனவும் சம்பவ இடம் குறித்து அரசுத்தரப்பு வழக்கில் முரண்பாடுகள் உள்ளது எனவும் கூறப்பட்டுள்ளது.

22. அசாஆ–5 வரைபடத்தை பார்க்கும் போது ரஹ்மத் புரோட்டா கடைக்குள் சம்பவ இடமாக காட்டப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. மேலும் சம்பவ இடத்திற்கு கீழ் புறம் ரஹமத் ஹோட்டல் என்ற ஒன்று இருப்பதாகவும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அசா–1 தன்னுடைய சாட்சியத்தில் இலஞ்சி சவுக்கு முக்கு ரோட்டில் உள்ள புரோட்டா கடையில் வைத்து சம்பவம் நடந்ததாக கூறியுள்ளார். புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையில் இலஞ்சி சவுக்கு முக்கில் உள்ள ரஹ்மத் புரோட்டா கடையில் வைத்து சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. புலன் விசாரணை அதிகாரி தன்னுடைய சாட்சியத்தில் ரஹ்மத் புரோட்டா கடையில் வைத்து சம்பவம் நடந்ததாக கூறியுள்ளார். அசாஆ–5 வரைபடத்தில் கீழ்புறம் ரக்மத் ஹோட்டல் இருப்பதாகத் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசுத்தரப்பில் ரக்மத் புரோட்டா கடை நடத்திவரும் அசா–2 மற்றும் ஊழியர்கள் அசா–3, அசா–5, அசா–6 ஆகியோர்கள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அசா–2 முகமது இப்ராஹிம் என்பவர் தன்னுடைய

சாட்சியத்தில் சம்பவத்தை பற்றி கூறவில்லை என்றாலும் புரோட்டா கடையில் சண்டை போடும் சத்தம் கேட்டதாகவும் ஒரு நபரை மற்றொரு நபர் கத்தியால் குத்தி விட்டதாக தான் கேள்விபட்டதாகவும் கூறியுள்ளார். புரோட்டா கடையில் வேலை பார்க்கும் அசா–3 முகமது அபுபக்கர் சித்திக் என்பவரும் தன்னுடைய சாட்சியத்தில் புரோட்டா கடையின் உள் சண்டை போடும் சத்தம் கேட்டது எனவும் யார் சத்தம் போட்டார்கள் என தான் பார்க்கவில்லை எனவும் கூறியுள்ளார். பார்வை மகஜர் சாட்சியான அசா–5 மசூது அலி, அசா–6 இணையத்துல்லா ஆகியோர்கள் தன்னுடைய சாட்சியத்தில் புரோட்டா கடையில் வேலை செய்வதாகவும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்துகள் தங்களுடையது தான் எனவும் கூறியுள்ளார்கள்.

23. அசா–1 சம்பவ இடத்திற்கு அருகில் வாஞ்சிநாதன் மணி மண்டபம் இல்லை என குறுக்கு விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ளதால் சம்பவ இடம் மாறுபாடாக உள்ளது என எதிரிதரப்பில் கூறியுள்ள கூற்று ஏற்றுக்கொள்ள கூடியதாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் சம்பவ இடத்தில் டேபிள், சேர் கலைந்திருந்ததாகவோ ரத்த கரை இருந்ததாகவோ அசாஆ–5 வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை என்பதால் ரஹமத் புரோட்டா கடைக்குள் வைத்து சம்பவம் நடைபெறவில்லை என முடிவு செய்ய முடியாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

24. புலன் விசாரணை அதிகாரி அசா–11 பாலமுருகன் என்பவர் 29.12.2022 அன்று 2 மணிக்கு எதிரியை கைது செய்து அவர் ஆஜர் செய்த கத்தியை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றியதாக கூறியுள்ளார். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சியான அசா–7 கிட்டு, அசா–8 எஸ்.பி.பி. பாண்டியன் ஆகியோர்கள் தங்களுடைய சாட்சியத்தில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்துக்கள் தங்களுடையது அல்ல என கூறியுள்ளார்கள். அத்தாட்சி அசாஆ–7 ஐ பார்க்கும் போது எதிரியிடமிருந்து கத்தி கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அசா–1 தன்னுடைய சாட்சியத்தில்

எதிரி கத்தியால் தன்னை தாக்கியதாக கூறியுள்ளார். அத்தாட்சி சாட்சிகளான அசா−7, அசா−8 ஆகியோர்கள் புலன் விசாரணை அதிகாரியான அசா−11 ன் சாட்சியத்தை ஒத்து சாட்சியம் அளிக்கவில்லை என்றாலும் புலன் விசாரணை அதிகாரி அசா−11 சாட்சியம் மற்றும் அத்தாட்சி ஆகியவற்றை பார்க்கும் போது எதிரியிடமிருந்து கத்தி கைப்பற்றப்பட்டதாக தெரியவருகிறது. மேலும் அசா−11 ன் சாட்சியம் நம்பத்தகுந்ததாக உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

25. எதிரிதரப்பில் அசா−1 தன்னுடைய சாட்சியத்தில் கத்தியின் அடையாளத்தை பற்றி புகார் வாக்குமூலத்திலும் மற்றும் விசாரணையிலும் கூறவில்லை என சாட்சியம் அளித்துள்ளார் எனவும் படிவம் 91 ல் ரத்தக் கறை படிந்த கத்தி என குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் புலன் விசாரணை அதிகாரி தன்னுடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் ரத்தக்கரை இல்லாத கத்தி எதிரி ஆஜர்படுத்தினார் என கூறியுள்ளார் எனவும் கத்தியில் இருந்த ரத்தக்கறை அசா−1 னுடையது என உறுதிப்படுத்தப்படவில்லை எனவும், மருத்துவரிடம் ஆயுதத்தை காண்பித்து கருத்துரு பெறப்படவில்லை எனவும் கூறப்பட்டுள்ளது.

26. அசாஆ−7 அத்தாட்சியில் கத்தி ஒன்று என குறிப்பிடப்பட்டுள்ளது. அசாஆ−8 படிவம் 91 ல் ரத்த கறை படிந்த கத்தி என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழக்கில் தாக்கில் செய்யப்பட்ட கத்தியில் மனித ரத்தம் இருந்ததாக தடய அறிவியல் அறிக்கை அசாஆ−9 ஐ பார்க்கும் போது தெரியவருகிறது. மேலும் அந்த அறிக்கையில் "Result of grouping test inconclusive" என குறிப்பிடப்பட்டுள்ளது. மருத்துவர் அசா−9 தன்னுடைய சாட்சியத்தில் அசா−1 க்கு ஏற்பட்ட காயம் கத்தியால் குத்தும் போது ஏற்பட வாய்ப்புள்ளதாக கூறியுள்ளார். அசா−1 தன்னுடைய புகாரில் கத்தியின் அடையாளத்தை கூறவில்லை என்றாலும் சாட்சியத்தில் அசாபொ−1 கத்தி வைத்து தான் எதிரி தன்னை தாக்கியதாக கூறியுள்ளார். இந்நிலையில் சாபொ−1 கத்தி வைத்து தான் எதிரி அசா−1 ஐ தாக்கியதாக அறியமுடிகிறது. மேலும் படிவம் 91 ல் குறிப்பிட்டுள்ளதற்கு முரணாக புலன் விசாரணை அதிகாரி அசா−11 தன்னுடைய

சாட்சியத்தில் கத்தியில் ரத்தக்கறை இல்லை என்று கூறியதால் மட்டும் அரசுத்தரப்பு வழக்கில் அசாபொ–1 ஐ பொறுத்து சந்தேகம் எழவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

27. எதிரிதரப்பில் அசா–1 சம்பவத்தின் போது அணித்திருந்த சட்டையின் முதுகு பகுதி மட்டும் தான் கிழித்த நிலையில் இருந்ததாக அசாஆ–8 படிவம் 91 ல் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் அசா–1 தன்னுடைய சாட்சியத்தில் எதிரி அசா–1 ன் முதுகிலும் மார்பு பகுதியிலும் குத்தியதாக கூறியுள்ளார் எனவும் சட்டையின் முன்பகுதியில் ஓட்டை இல்லாத நிலையில் எதிரி அசா–1 ன் மார்பில் குத்தியதாக கருதமுடியாது எனவும் கூறப்பட்டுள்ளது. அசா–1 சம்பவ நாள் அணிந்திருந்த சட்டை மற்றும் சாரம் ஆகியவை புலன் விசாரணை அதிகாரியால் கைப்பற்றப்பட்டுள்ளது. அசா–1 தன்னுடைய சாட்சியத்தில் அந்த சட்டை மற்றும் சாரம் சம்பவ நாள் தான் அணிந்திருந்ததாகவும் அதனை போலீசாரிடம் கொடுத்ததாகவும் கூறியுள்ளார். சட்டை சாபொ–2 ஆகவும், சாரம் சாபொ–3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சாபொ–2 சட்டையை பார்க்கும் போது சட்டையின் முதுகு பகுதியிலும் முன்பகுதியிலும் கிழிந்து இருப்பதாக தெரியவருகிறது. மேலும் அசா–1 ன் முதுகு பகுதியிலும் மார்பு பகுதியிலும் குத்து காயங்கள் இருந்ததாக மருத்துவர் அசா–10 ன் சாட்சியம் மற்றும் காயச்சான்றிதழ் அசாஆ–4 ஆகியவற்றை பார்க்கும்போது அறியமுடிகிறது. எதிரிதரப்பில் மருத்துவரிடம் கூற்றுரை கேள்வி கேட்கும்போது மருத்துவர் கீழ்கண்டவாறு கூறியுள்ளார்.

> "உடைந்து போன கண்ணாடித்துண்டுகளில் வேகமாக தள்ளி கீழே விழும் போது நான் பார்த்த காயங்கள் ஏற்பட வாய்புள்ளதா? என்றால் முதுகு பகுதியிலோ, மார்பு பகுதியிலோ ஒரு பக்கம் மட்டும் தான் ஏற்பட வாய்ப்புள்ளது. முன்பக்கமாக விழுந்தவர் எழும்பி பின்பக்கமாக விழும்போது நான் பார்த்த காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது" என்று கூறியுள்ளார்.

அசா–1 க்கு முதுகிலும், மார்பு பகுதியிலும், வலது கை பெருவிரலிலும் காயங்கள் இருந்துள்ளது. அசா–1 கண்ணாடி துண்டு மீது விழுந்திருந்தால் ஏதாவது ஒரு பக்கம் தான் காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இந்நிலையில் அசா–1 ற்கு ஏற்பட்ட காயத்தைப் பொறுத்து முரண்பாடுகள் இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

28. எதிரி தரப்பில் அசா–1 எதிரியின் தாயாரிடம் தவறாக நடந்து கொண்டதாகவும் அதனைப்பற்றி எதிரி அசா–1 டம் கேட்டபோது எதிரியை அசா–1 தாக்கிவிட்டு எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்ததாகவும் எதிரிக்கு அசா–1 ஐ கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இல்லை எனவும் அரசுத்தரப்பில் எதிரிக்கும் அசா–1 க்கும் முன்விரோதம் இருந்ததாக கூறப்பட்டுள்ளதை பொறுத்து எதிரியின் தாயாரையோ அசா–1 ன் உறவினர்களையோ விசாரித்து தெளிவுப்படுத்தவில்லை எனவும் அசா–1 தன்னுடைய சாட்சியத்திலும் புகார் வாக்குமூலத்திலும் எதிரி தாக்கியதை தான் தடுக்காவிட்டால் தனக்கு மரணம் விளைவிக்கக்கூடிய கொடுங்காயம் ஏற்பட்டு இருக்கும் என்று கூறவில்லை எனவும் அசா–1 ற்கு சிறு காயம் தான் ஏற்பட்டுள்ளது எனவும் இந்நிலையில் எதிரி அசா–1 ஐ கொலை செய்ய முயற்சித்ததாக கருத முடியாது எனவும் கூறப்பட்டுள்ளது.

29. அசா–1 தன்னுடைய சாட்சியத்தில் சம்பவத்திற்கு நான்கு மாதங்களுக்கு முன்பு தனக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தை எதிரி கீழே தள்ளி விட்டதாகவும் எதிரியின் அம்மாவிடம் இது குறித்து சொன்னபோது தனது மகனை கண்டிப்பதாக சொன்னார் எனவும் இந்த முன்விரோதத்தை மனதில் வைத்துக் கொண்டு எதிரி தன்னை தாக்கியதாகவும் கூறியுள்ளார். புலன் விசாரணை அதிகாரி எதிரியின் தாயாரை விசாரிக்கவில்லை. மேலும் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட அசா–2, அசா–3, அசா–4 ஆகியோர்கள் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளார்கள். அசா–1 ன் சாட்சியத்தில் இருந்தும் அசா–1 ற்கு ஏற்பட்ட காயங்களை பார்க்கும் போதும் எதிரி அசா–1 ஐ மூன்று முறை கத்தியால்

குத்தி உள்ளதாக தெரியவருகிறது. மேலும் எதிரி மார்பு, முதுகு பகுதி ஆகிய முக்கியமான உடலின் பாகங்களில் கத்தியால் குத்தி உள்ளார். அசா–1 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை சாட்சியத்தை பார்க்கும் போது அவரின் சாட்சியம் நம்பதகுந்ததாக உள்ளது. எதிரி அசா–1 ஐ அபாயகரமான ஆயுதமான கத்தியால் மூன்று முறை தாக்கியதை பார்க்கும் போது எதிரிக்கு அசா–1 ஐ கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்ததாக அறியமுடிகிறது.

30. மேலே கூறிய விரிவான விளக்கங்களில் இருந்து அரசுத்தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட இதச பிரிவு 307 ன் படியான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது எனவும் எனவே எதிரி இதச பிரிவு 307 ன்படி குற்றவாளி எனவும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

31. அசா–1 தன்னுடைய சாட்சியத்தில் எதிரி அவதூறான வார்த்தைகள் பேசியதால் தனக்கு அவமானமோ அருவருப்போ ஏற்பட்டதாக சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் எதிரி மிரட்டியதினால் தனக்கு பய உணர்வு ஏற்பட்டதாகவும் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே எதிரி மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 294(பி), 506(2) ன் படியான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை எனவும் எனவே எதிரி இதச பிரிவுகள் 294(பி), 506(2) ன்படி குற்றவாளி இல்லை எனவும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

32. எதிரி இதச பிரிவு 307–ன் படி குற்றவாளி என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து பிரிவு 235(ii) குவிமுசவின் கீழ் எதிரியிடம் தண்டனை குறித்து ஏதேனும் கூற விரும்புகிறீர்களா என வினவியபோது "மன்னித்து விட வேண்டுகிறேன்" என்று கூறியுள்ளார்.

33. முடிவாக, எதிரி மீதான இதச பிரிவுகள் 294(பி), 506(ii) –ன் படியான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே மேற்கூறிய பிரிவின் கீழ் எதிரி குற்றவாளி அல்ல என்றும்

முடிவு செய்து, எதிரியை இதச பிரிவு 294(பி), 506(2) – ன் படியான குற்றங்களிலிருந்து குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 235(i)ன் கீழ் விடுதலை செய்தும், எதிரி மீதான இதச பிரிவு 307– ன் படியான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே எதிரி மேற்கூறிய பிரிவின் கீழ் குற்றவாளி என்றும் தீர்மானித்து வழக்கின் தன்மை, எதிரியின் வயது, குடும்ப சூழ்நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு, எதிரி மீதான இதச பிரிவு 307 ன் படியான குற்றத்திற்கு தண்டனையாக **ஒரு வருடம் கடுங்காவல் சிறைதண்டனையும், அபராதம் ரூ.5000/–** விதித்தும், அபராதம் கட்டத் தவறினால் மேலும் **ஒரு மாதம் மெய்காவல் சிறைதண்டனை** விதித்தும் குவிமுச பிரிவு 235(ii) ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. மொத்த அபராத தொகை ரூ.5000/– இவ்வழக்கில் எதிரி விசாரணை காலத்தில் நீதிமன்ற காவலில் இருந்த 29.12.2022 முதல் 12.01.2023 மற்றும் 26.05.2025 முதல் 26.08.2025 வரையிலான நாட்களை எதிரியின் சிறைத்தண்டனை காலத்தில் இருந்து கழித்துக் கொள்ள குவிமுச பிரிவு 428 ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

34. இவ்வழக்கில் பிஆர் எண் 119/2025 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு, சாபொ–1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள கத்தி ஒன்று. சாபொ–2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள இரத்தக்கறை படிந்த நீலக்கலர், சிகப்பு கலர் முதுகுப்பகுதியில் கிழிந்த நிலையில் உள்ள அரைக்கை சட்டை ஒன்று. சாபொ–3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள இரத்தக்கறை படிந்த நீலம், வெள்ளைக்கலர் கட்டம்போட்ட சாரம் ஒன்று ஆகியவை பயனற்ற பொருள்கள் என்பதினால் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் அழிக்குமாறும், மேல் முறையீடு இருப்பின் மேல் முறையீட்டு உத்தரவுப்படி செயல்பட வேண்டு மென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை திருத்தம்

மேற்கொள்ளப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 11 ஆம் நாள் ஆகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.15 17:45:13 +0530

உதவி அமர்வு நீதிபதி மற்றும்
தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u> : –

| அரசுத்தரப்பு சாட்சி எண் | சாட்சியின் பெயர் | விளக்கம் |
|---|---|---|
| 1 | திரு. மாரியப்பன் | புகார்தாரர் |
| 2 | திரு. முகமது இப்ராஹிம் | கண்ணுற்ற சாட்சி |
| 3 | திரு. முகமது அபுபக்கர் சித்திக் | கண்ணுற்ற சாட்சி |
| 4 | திரு. சாகுல் ஹமீது | கண்ணுற்ற சாட்சி |
| 5 | திரு. மசூது அலி | மாதிரி வரைபடம், பார்வை மகஜர் சாட்சி |
| 6 | திரு. இணையத்துல்லா | மாதிரி வரைபடம், பார்வை மகஜர் சாட்சி |
| 7 | திரு. கிட்டு | ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி சாட்சி |
| 8 | திரு. எஸ்.பி.பி. பாண்டியன் | ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி சாட்சி |
| 9 | திரு. வெள்ளத்துரை (காவல் உதவி ஆய்வாளர்) | வழக்கு பதிவு செய்த சாட்சி |
| 10 | மருத்துவர். ராமர் | காயச்சான்று சாட்சி |
| 11 | திரு. பாலமுருகன் (காவல் ஆய்வாளர்) | வழக்கு விசாரணை குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்த சாட்சி |

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u> :–

| அரசுத்தரப்பு சான்றாவணம் எண் | சான்றாவணத்தின் விளக்கம் | நிரூபித்தவர் / சான்றளித்தவர் |
|---|---|---|
| 1. | புகார் வாக்குமூலம் | அ.சா.1 |
| 2. | பார்வை மகஜர் | அ.சா.5 |

| | | |
|---|---|---|
| 3. | முதல் தகவல் அறிக்கை | அ.சா.9 |
| 4. | காயச்சான்று | அ.சா.10 |
| 5. | மாதிரி வரைபடம் | அ.சா.11 |
| 6 | ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.சா.11 |
| 7 | அத்தாட்சி | அ.சா.11 |
| 8 | படிவம் 91 | அ.சா.11 |
| 9 | பகுப்பாய்வு அறிக்கை | அ.சா.11 |

<u>அரசு தரப்பு சான்று பொருட்கள்:–</u>

| சான்று பொருள் எண் | ஆவணத்தின் / சாட்சிப் பொருளின் விளக்கம் | நிரூபித்தவர் / சான்றளித்தவர் |
|---|---|---|
| 1 | கத்தி ஒன்று (இரத்தக்கறை படிந்த சுமார் 11 செமீ நீளம் உள்ள கொம்பு கைப்பிடியும் சுமார் 23.5 செமீ நீளம் உள்ள இரும்பு பாகமும் கொண்ட கத்தி ஒன்று) | அசா–1 |
| 2 | இரத்தக்கறை படிந்த நீலக்கலர், சிகப்பு கலர் முதுகுப்பகுதியில் கிழிந்த நிலையில் உள்ள அரைக்கை சட்டை ஒன்று. | அசா–1 |
| 3 | இரத்தக்கறை படிந்த நீலம், வெள்ளைக்கலர் கட்டம்போட்ட சாரம் ஒன்று | அசா–1 |

<u>சாட்சி சான்றாவணம் </u>-

| சாட்சி சான்றாவணம் எண் | சான்றாவணத்தின் விளக்கம் | நிரூபித்தவர் / சான்றளித்தவர் |
|---|---|---|
| 1 | டிஸ்ஜார்ஜ் சம்மரி | அசா–10 |

<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் </u> :– இல்லை
<u>எதிரி தரப்பு சான்று பொருள்கள் </u>:– இல்லை

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.15 17:45:21 +0530

உதவி அமர்வு நீதிபதி மற்றும்
தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

<u>பின் குறிப்பு:–</u>

- ✓ எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்தார்.
- ✓ சாட்சிகள் மூன்று நாட்களுக்கு மேல்விசாரிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
- ✓ காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.